# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 12.08.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் அதிகாரம் அல்பக்கராவின் 187 வது வசனத்தை ஓதினார்கள்:**

*பொருள்: எனது அடியார் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நிச்சயமாக நான் அருகில் இருக்கின்றேன். துஆ செய்யக்கூடியவரின் துஆவை அவர் என்னை அழைக்கும் போது ஏற்றுக் கொள்கிறேன். அவர் எனது (கட்டளைக்கு) கட்டுப்பட்டு நடக்க வேண்டும். மேலும் என் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். இதன் மூலமாக அவர்கள் நேர்வழியினை அடைவார்கள் என்று கூறுவீராக. (2: 187)*

உலகிற்கு இன்று எந்த அளவு இறைவன் பக்கம் குனிய வேண்டிய அவசியம் உள்ளதோ அதே அளவு உலகம் தூரம் விலகிச் செல்கிறது. அதாவது இந்த உலகில் வாழக்கூடிய, அஷ்ரஃபுல் மக்லூத் (படைப்பினங்களில் சிறந்தவர்) என்று அழைக்கப்படக் கூடிய மனிதன், உலக குழப்பங்கள், சோதனைகளிலிருந்து தப்பிப்பதற்கு மற்றும் தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கு எந்த அளவு இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டுமோ அதே அளவு இந்த தொடர்பில் குறைவை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றான். இறை தொடர்பை ஏற்படுத்தியுள்ளதாக வாதம் செய்யக்கூடியவர்களும் இந்தக் கடமைகளின் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. அல்லது கவனம் செலுத்துவதற்கு முயற்சி செய்வதும் இல்லை. இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த வெறும் வெளிப்படையான நம்பிக்கை வெளிப்படையான இபாதத்துகள் மட்டும் போதாது. மாறாக நம்பிக்கை மற்றும் இபாதத்துகளின் ஆழம் வரை கொண்டு செல்லக்கூடிய ஆன்மாவை தேட வேண்டிய அவசியம் இருக்கின்றது. இதுதான் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று கூறக்கூடியவர்களில் இறை தொடர்பை ஏற்படுத்தக் கூடியவர்களின் வாதமாகும்.

ஆனால் உலகில் மிகப்பெரிய ஒரு கூட்டம் ஏறக்குறைய முக்கால் பகுதி மக்கள் இருக்கின்றனர். அவர்கள் இறைவனுக்கு இணை வைத்து தன்னைத்தானே முஷ்ரிக் (இணை வைப்பவர்) களாக ஆக்கியுள்ளனர். அல்லது இறை இருப்பில் நம்பிக்கை கொள்வதில்லை. இவர்கள் இறை இருப்பினை மறுக்கக் கூடியவர்கள் ஆவார்கள். தான் மட்டும் மறுப்பதில்லை. மாறாக உலகையும் வழிகெடுப்பதற்கு எந்தவித வழியினையும் விட்டு வைப்பதில்லை.

எவ்வாறிருப்பினும், இந்த நிலைமையில் ஒரு சிறிய கூட்டம் ஒன்றும் உள்ளது. அந்தக் கூட்டம் இறை வாக்குறுதியின் மீது நம்பிக்கை வைக்கக் கூடியதாகவும், இறைவன் மீது நம்பிக்கை வைக்கக்கூடியதாகவும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்புகள் நிறைவேறுவதிலும், அல்லாஹ் அன்னாருடன் செய்த வாக்குறுதிகள் நிறைவேறுவதை நம்பக்கூடியதாகவும் இருக்கின்றது. மேலும் இக்காலத்தில் உலகம் தன்னைப் படைத்தவனை, வானங்கள், பூமியைப் படைத்தவனை மறந்து கொண்டிருக்கிறது. அல்லது அவனைப் பற்றிய சரியான ஞானம் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது.

அல்லாஹ் தன்னுடைய ருபூபிய்யத் (காத்தோம்புதல்) என்ற பண்பை வெளிப்படுத்துவதற்காகவும், உலகத்தைக் குழப்பத்திலிருந்து காப்பாற்றுவதற்காகவும், அடியானை இறைவனுடன் நெருக்கத்தை ஏற்படுத்த வைப்பதற்காகவும் காலத்தின் இமாமை அனுப்பி இருக்கின்றான் என்று நம்பியிருக்கின்றனர். இறை அருளால் இந்தக் கூட்டம் அல்லது இந்தப் பிரிவு அல்லது இந்த ஜமாஅத் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஆகும்.

எனவே அவரை ஏற்றுக் கொள்வதும், இறைவன் அனுப்ப வேண்டியவரை அனுப்பி விட்டான் என நம்புவது மட்டும் போதுமானதாகுமா? வரக்கூடியவர் அல்லது அவருடைய சீடர்களுள் சிலர் படைப்பாளனுக்கும்,

அடியானுக்கும் தொடர்பை ஏற்படுத்துவதற்கும் உலகக் குழப்பங்களை ஒழிப்பதற்கும் முயற்சி செய்வார்கள். இவ்வாறு அஹ்மதிகள் எண்ணினால் நமது எண்ணமும் அவர்களைச் சார்ந்தவையாகவே இருக்கும். வெறும் நம்பிக்கைகான வாதம் செய்துவிட்டு, இபாதத்திற்கான வாதம் செய்து விட்டு அமல் செய்வதிலிருந்து தூரம் விலகியிருக்கிறோம் என்றால் ஒருவேளை நாம் நமது நிலையைக் கவனிக்கவில்லை என்றால், நாம் நமது இறைவனுடன் உயிருள்ள ஒரு தொடர்பை ஏற்படுத்தவில்லையென்றால் நாம் நமது சந்ததிகளுக்கும் நமது சூழலில் வசிப்பவர்களுக்கும் வர வேண்டியவரைப் பற்றிய தூதுச் செய்தியை எட்ட வைக்கவில்லையென்றால் அதன் பக்கம் கவனமூட்டவில்லை என்றால் நாம் பெற்றும் அதனை இழந்து விட்டோம் என்று தான் பொருளாகும்.

உலகத்தில் பகைமையை ஏற்படுத்திக் கொண்டு இறைவனைப் பெறவில்லை என்றாகி விடும். எனவே அஹ்மதிகளாக ஆன பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வந்த பிறகு உண்மையான ரஹ்மானின் அடியானிடம் இருக்க வேண்டிய ரூஹை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஏற்படுத்தி வந்த தரத்தினைப் பெற முயற்சி செய்ய வேண்டும். அன்னாருடைய உம்மத்திலிருந்து விலகிப் போய்விடக்கூடிய செய்தியை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியதும் அன்னாருக்கு உம்மத்தைப் பற்றிய கவலை ஏற்பட்டது. அப்போது அல்லாஹ் அன்னாரின் துயரத்தினைக் கண்டு உம்மத்திற்காக அன்னார் செய்த துஆவை ஏற்றுக் கொண்டவாறு ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூபிஹிம் வஹுவல் அஸீஸுல் ஹகீம். இவர்களுடன் சேராத இன்னொரு கூட்டமும் உள்ளது. அவன் வல்லமை மிக்கவனும் நுண்ணிய ஞானமுள்ளவனும் ஆவான்.

**அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இவ்வாறு கூறுவான்:**

ஓ முஹம்மதே! (ஸல்) எவ்வாறு அறிவில்லாத முஷ்ரிக் சமுதாயத்தை இறை அடியார்களாக ஆக்கினேனோ எவ்வாறு உலக இன்பத்தில் மூழ்கி இறைவனைப் பற்றிய அறவே அறிவில்லாத மக்களை ஞானமுள்ள மக்களாக ஆக்கினேனோ அதே போன்று மக்கள் சீர்கெட்ட பிறகு ஆகரீன்களில் ஓர் உண்மைப் பேரன்பரை ஏற்படுத்தி அவர் மூலம் ரஹ்மானின் அடியார்களை உருவாக்குவேன்; மேலும் அந்த மக்கள் என்னுடைய அடியார்களாக செயல்படுவார்கள் எனக் கூறி ஆறுதல் வழங்கியுள்ளான்.

ஓ முஹம்மதே! (ஸல்) ஒரு தற்காலிகமான வீழ்ச்சி ஏற்படத்தான் செய்யும். ஆனால் உண்மையான நுண்ணிய ஞானமுள்ள இறைவன் முஹம்மதுடைய மார்க்கத்தைத் தான் அனைத்து மனித குலத்திற்கு இரட்சிப்பிற்கு வழியாகும் என முடிவு எழுதி வைத்து விட்டான். இப்போது முஹம்மதுடைய மார்க்கம் மட்டும் தான் உலகில் ஏற்படும். குழப்பங்களை களைவதற்குரிய கடைசி நம்பிக்கை மற்றும் சிகிச்சை ஆகும். இந்த மார்க்கத்திலுள்ள சிறப்புகளை வெளிப்படுத்தித்தான் உலகிலுள்ள மற்ற மார்க்கங்களை வெல்ல முடியும். தற்போது இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு முஹம்மது (ஸல்) அவர்களின் மஸீஹ் மற்றும் அன்னாரை ஏற்றுக் கொண்டவர்கள் தான் வேலை செய்ய வேண்டும். ரப்புல் ஆலமீனாக இருக்கக்கூடிய அல்லாஹ் சிறந்த படைப்பினங்களை காப்பாற்றுவதற்காக கைர உம்மத்திற்கு அதற்குரிய மேன்மையை வழங்குவதற்காக இவ்வாறு ஏற்பாடுகளைச் செய்துள்ளான். மேலும் செய்து கொண்டே இருப்பான். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு உம்முடைய உண்மை பேரன்பர் வருவார்; அவர் உலகில் மார்க்கத்தை நிலைநாட்டுவார் என ஆறுதல் வழங்கியுள்ளான். ஆனால் வரக்கூடிய மஸீஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய பலனிலிருந்து பயனடைந்தவாறே வருவார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** ரப்புல் ஆலமீனுடைய ருபூபிய்யத் (காத்தோம்புதல்) பற்றி ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் சுப்ஹானவுத்தஆலா தனது வார்த்தையான ரப்புல் ஆலமீன் என்பதில் அவன் அனைத்திற்கும் படைப்பாளன் என்பதை கூறியுள்ளான். வானங்களிலும், பூமியிலும் உள்ளவையெல்லாம்

அவனது வல்லமை மூலமாகவே உருவானவையாகும். மேலும் இந்த பூமியிலுள்ள நேர்வழி பெற்ற ஜமாஅத் அல்லது தீய வழிதவறிய மக்கள் அனைவரும் ஆலமீனைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். சில சமயங்கள் வழிகேடல், நிராகரிப்பு, தீமை போன்றவை அதிகமாகி விடுகின்றன. எதுவரையென்றால் பூமி கொடுமை, அநீதியினால் நிறைந்து காணப்படுகின்றது. அப்பொழுது மக்கள் இறைவனை விட்டு விடுகின்றனர். அவர்கள் அடியானாக இருப்பதற்குரிய தன்மையை உணர்வதில்லை. மேலும் அவர்கள் இறைவனுக்குக் கொடுக்க வேண்டிய உரிமையையும் கொடுப்பதில்லை.

உலகம் ஒரு இரவைப் போன்று இருள் நிறைந்ததாகி விடுகின்றது. மார்க்கம் இந்த கஷ்டங்களுக்கு கீழ் நசுக்கப்படுகின்றது. பிறகு அல்லாஹ் வேறொரு உலகத்தைக் கொண்டு வருவான். அப்போது இந்த பூமி வேறொரு பூமியாக மாறி விடும். வானத்திலிருந்து ஒரு புதிய நியதி இறங்க ஆரம்பித்து விடும். மக்களுக்கு உண்மையை கண்டறியக் கூடிய உள்ளம் இறைவனுடைய அருளுக்கு நன்றி செலுத்தக்கூடிய பேசக்கூடிய நாவு கொடுக்கப்படும். அப்போது அவர்கள் தன்னுடைய நஃப்ஸை இறைவனுடைய சன்னிதானத்தில் நேர்த்தியான பாதையாக ஏற்படுத்திக் கொள்வார்கள். அச்சத்துடனும் நம்பிக்கையுடனும் அவன்பக்கம் வருவார்கள். தன்னுடைய வெட்கத்தினால் தாழ்ந்த பார்வையுடனும் கிப்லாவின் பக்கம் முகம் திருப்பியவாறு வருவார்கள். எங்கிருந்து அவர்களுடைய தேவைகள் நிறைவேறுமோ அதன்பக்கம் கவனம் செலுத்துவார்கள். அதாவது இறைவன் பக்கம் கவனம் செலுத்துவார்கள். மேலும் அடியானின் தன்மையில் அன்பின் எல்லையைத் தொடக்கூடியதாக இருக்கும். வழிகேடல் எல்லையை மீறும் போது நிலைமை மாறியதால் மக்கள் விலங்குகளைப் போல் ஆகிவிடுவர். அப்போது இறைவனுடைய ரஹ்மத் அவனது என்றும் நிலைத்திருக்கும் அருள் இருளை அகற்றக்கூடிய, இப்லீஸ் ஏற்படுத்திய கட்டடங்களையும் கூடாரங்களையும் அழிக்கக்கூடியவர் விண்ணில் தோன்ற வேண்டுமென ஒரு நபரை ஏற்படுத்த வேண்டுமென கருதுகிறது. அப்போது ரஹ்மான் இறைவன் புறமிருந்து ஒரு இமாம் தோன்றுவார். அவர் ஷய்த்தானின் படைகளுடன் போட்டியிடுவார். இந்த ஷய்த்தானிய மற்றும் ரஹ்மானியப் படைகள் தொடர்ந்து போட்டி போட்டுக் கொண்டிருக்கும். எவருக்கு இரண்டு கண்கள் வழங்கப்பட்டுள்ளதோ அவர் தான் இதனைக் காண்பார்.

எதுவரையென்றால் பொய்யர்களின் கழுத்தில் சங்கிலி பிணைக்கப்பட்டு விடும். மேலும் பொய்யின் கானல் நீர் போன்ற ஆதாரங்கள் அழிந்து விடும். அந்த இமாம் பகைவர்களின் மீது வெற்றி பெற்றவராகவும், நேர்வழி பெற்றவர்களுக்கு உதவியாளராகவும் இருப்பார். அவர் நேர்வழியின் கொடியை உயர்த்துவார். தூய உள்ளம் படைத்த கூட்டத்தினை உயிர்ப்பிக்கக் கூடியவராக இருப்பார். எதுவரையென்றால் அவர் குஃப்ரை கைது செய்து விட்டார் என மக்கள் கருதுவர். மேலும் அவர்களின் திட்டங்களை தோல்வியடையச் செய்து விட்டார் எனவும் கருதுவர். அவர் பொய் மற்றும் ஏமாற்றுதல் போன்ற மிருகங்களைக் கைது செய்து விட்டார். மேலும் இவர்களின் கழுத்தில் விலங்குகளை மாட்டி விட்டார். அவர் பித்அத்துகளுடைய கட்டடங்களை தகர்த்து விட்டார். அதன் பீடங்களை உடைத்து விட்டார் எனவும் கருதுவர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று இந்த மிகப்பெரிய புரட்சி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாக வந்தது எனக் கூறுகின்றார்கள். எனவே இது தற்காலிகமான மாற்றம்தானா? ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தோன்றிய நேரமானது தற்காலிகமாகத் தோன்றிய உலகமா? நேரமா?

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீனாக இருந்தார்கள். அன்னாரின் காலகட்டம் கியாமத் வரை நிலைத்திருக்கக்கூடிய காலகட்டமாகும். அன்னாரின் உம்மத் கியாமத் வரை வெற்றி பெறக்கூடிய உம்மத் ஆகும். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த உம்மத்தின் நபி ஆவார்கள்.

நான் கூறியது போன்று அல்லாஹ் இந்த புரட்சி நிலைத்திருப்பதற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வருங்காலத்தில் ஒருவர் வருவார் என முன்னறிவிப்பு செய்தான். இந்த விஷயத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

பிறகு தூய்மையான இறைவன் தனது வார்த்தையான ரப்புல் ஆலமீனில் இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளான். அதாவது அவன் எல்லாவற்றையும் படைபாளன் ஆவான். வானங்கள் மற்றும் பூமியில் அவனது புகழ் தான் பாடப்படுகின்றது. பிறகு புகழ்பாடக்கூடியவர்கள் எப்பொழுதும் அவனைப் புகழ்ந்து கொண்டேயிருப்பார்கள். அவர்கள் இறை நினைவில் மூழ்கியிருப்பார்கள். எந்தவொரு பொருளும் அவனது புகழ்பாடுவதிலிருந்து தவிர்ந்திருக்கவில்லை. அவனது ஒரு அடியான் தனது ஆசைகளின் ஆடைகளைக் கழற்றி எறியும் போது தனது உணர்வுகளிலிருந்து தவிர்ந்து இருக்கும் போது அல்லாஹ் மற்றும் அவனது இபாதத்துகளில் தன்னை மாய்த்துக் கொள்ளும் போது அவனை வளர்த்த அந்த ரப்-ஐ அவன் கண்டறிவான். அவர் எல்லா நேரங்களிலும் அவனைப் புகழ்வார். அவர் தனது முழுமையான உள்ளத்துடன் தனது ஒவ்வொரு உறுப்பின் மூலமாகவும் அவனை நேசிப்பான். அப்போது அந்த மனிதன் உலகங்களின் ஒரு உலகமாக மாறி விடுவார். இதனால் ஆலமுல் ஆலமீனின் வேதமாகிய அல்குர்ஆனில் இப்ராஹீம் (அலை) அவர்களது பெயர் உம்மத் என்று வைக்கப்பட்டுள்ளது. உலகங்களின் ஒரு உலகம் ஹஸ்ரத் காத்தமுன்னபிய்யீன் (ஸல்) அவர்களுக்காக படைக்கப்பட்டதாகும். இன்னொரு உலகம் அல்லாஹ் தனது அடியார்களுக்கு கருணை காட்டியவாறு கடைசிக் காலத்தில் மூஃமின்களில் மற்றொரு கூட்டத்தை உருவாக்குவான். இதனைப் பற்றி தான் அல்லாஹ் லஹுல் ஹம்து வல் ஊலா வல் ஆகிராவில் கூறியிருக்கின்றான்.

இந்த வசனத்தில் அல்லாஹ் இரண்டு அஹ்மதுகளைப் பற்றி கூறியிருக்கின்றான். அவ்வாறு கூறியவாறு அவ்விருவரையும் தனது அளவில்லாத அருட்களுக்கு ஆளாக்கியிருக்கின்றான். முதல் அஹ்மது நமது நபி முஹம்மது முஸ்தஃபா ரஸூல் முஜ்தபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். இரண்டாது அஹ்மது அகிருஸ்ஸமான் கடைசிக் காலத்தின் அஹ்மது. அவரது பெயரை கருணையுள்ள இறைவன், மஸீஹ் மஹ்தி என்று கூறியிருக்கிறான். இந்த நுட்பமான கருத்தை இறைவனுடைய வார்த்தையான அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீனிலிருந்து பெற்றதாகும்.

எனவே சிந்திக்கக்கூடிய ஒவ்வொருவரும் சிந்தனை செய்து பார்க்க வேண்டும். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அரபி புத்தகம் இஃஜாஸுல் மஸீஹ் ஆகும். இந்த இரண்டு மேற்கோள்களும் அதிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளன.

எனவே முழுமையான அடியானை முழுமையாகப் பின்பற்றுதல் மற்றும் அன்னார் மீது எல்லை மீறிய அன்பு நேசத்தால் தனது ஆசைகளின் ஆடையை தூக்கி எறிந்த காரணத்தால், அல்லாஹ்வின் சன்னிதியில் தன்னை மாய்த்துக் கொண்ட காரணத்தால் இறைவன் கடைசி காலத்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பியிருக்கிறான். அவர் மீண்டும் நமக்கு இறைவன் மீது கொள்ள வேண்டிய அன்பு, நன்றியுடைமை மற்றும் அடியானுக்குத் தேவையான வழிகளைக் காண்பித்துள்ளார்கள்.

நான் கூறியது போன்று அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலம் நிராகரிப்பவர் மற்றும் இணை வைப்பவர்கள் ஆகியோர் இறை அடியானாக மாற்றக்கூடிய ஒரு புரட்சியை ஏற்படுத்தினான். மேலும் உலகத்திற்கு செய்தியினை எட்ட வைத்தவாறு சமுதாயங்களையும், நாடுகளையும் ஓர் இறைவனை வணங்கக்கூடிய மக்களாக மாற்றி விட்டார்கள். ஆனால் மீண்டும் இறைவனை மறந்து பொறுப்புகள் அதிகமான காரணத்தால் பிறந்த நோக்கத்தினை மறந்து அல்லாஹ்வின் அருளிலிருந்து தவிர்க்கப்பட்டனர். இருந்தாலும் அப்படிப்பட்ட இருண்ட காலகட்டத்திலும் ஆன்மீக அமைப்பின் தொடர்ச்சியை நிலைநாட்ட அந்ததந்தப் பகுதிகளில் அல்லாஹ் நல்லடியார்களை ஏற்படுத்திக் கொண்டேயிருந்தான். ஆனால் முஸ்லிம்களுக்கு இருந்த கண்ணியம், மேன்மை மற்றும் ஆரம்ப காலத்தில் தென்பட்ட இறை தொடர்பு அனைத்தும் மறைந்து விட்டன. எனவே இறைவன் இரண்டாவது அஹ்மது மூலமாக ரப்புல் ஆலமீனின் புரட்சியை ஏற்படுத்துவதாக அறிவித்த அறிவிப்பை அன்னாரை ஏற்றுக் கொண்டவர்கள் தான் தொடர்ந்து செய்ய வேண்டும். தொடர்ந்து செய்யக் கூடியவர்கள்தான் உண்மையில் அன்னாரை ஏற்றுக் கொண்டவர்கள் ஆவார்கள். ரஹ்மானுடைய அடியானாக ஆக வேண்டும். ரஹ்மானுடைய அடியார்களை அவனிடமே உதவி

கோரியவாறு ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் மற்ற முஸ்லிம்களை விட தனித்தவர்கள் எனக் கூற தகுதி பெற்றவர்களாவோம். நான் கூறியது போன்று ஈமானுடைய வாதம் மட்டும் போதாது. இதன் மூலம் நாம் மற்றவர்களை விட மேன்மையானவர்கள் எனக் கருதி விட முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான அதிகப்படியான வேலைகளைச் செய்து விட்டு சென்றுள்ளார்கள்.

அன்னாருடைய சஹாபாக்களில் ரூஃயா மற்றும் கனவுக் காட்சிகளை காணக்கூடிய இபாதுர் ரஹ்மான் தோன்றினார்கள். மேலும் அல்லாஹ்வுடைய அடியானின் உரிமைகளை நிறைவேற்றக்கூடிய மனிதர்கள் தோன்றினார்கள். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாகவே பின்னவர்களைப் பற்றிய முன்னறிவிப்பு நிறைவேறியது. அன்னாரது சஹாபாக்களுக்கு முன்னவர்களுக்கு கிடைத்த அதே தரம் கிடைக்கப்பெற்றது. ஆனால் இந்த அமைப்பு ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான முன்னறிவிப்பு கியாமத் வரைக்கும் நீக்கக்கூடியதாகும். நாம் இதனை மிகவும் பொறுமையுடன் கூறுகின்றோம். இவ்வாறு கூறுவது மட்டும் போதாது. நாம் இந்தப் புரட்சியில் பங்குதாரர்கள் ஆவதற்கு தமது பொறுப்புகளை உணர வேண்டும். நமது முன்னோர்களுடைய நிலைமையக் கண்டு நாம் சந்தோஷம் அடைய முடியாது. மாறாக மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்களின் வாழ்க்கையில் தென்படக்கூடிய புரட்சியின் வழியில் கிடைத்த அந்த தொடர்ச்சியை தொடர வேண்டும். இன்று உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவது மேலும் இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு அஹ்மதியின் மீதும் இருக்கிறது.

எனவே இதற்காக எதுவரை நாம் தனிப்பட்ட முறையிலும், ஜமாஅத் அளவிலும் எப்போதும் முயற்சி செய்ய மாட்டோமோ, ஒவ்வொருவரும் தன் மீது சுமத்தப்பட்ட பொறுப்புகளை உணர்ந்து அதனை நிறைவேற்ற முயற்சி செய்யாதவரை உண்மையான முறையில் இரண்டாவது அஹ்மதை ஏறறுக் கொண்டவர்களாவோம் என ஒருபோதும் கூற முடியாது. இந்தப் பொறுப்புகளை நாம் நமது இபாதத்துகளில் உயர்த்துவதற்கான தரத்தினை ஏற்படுத்தாதவரை ஒருபோதும் நிறைவேற முடியாது. அல்லாஹ்வின் ஃபல் யூமினு பிஹியை செயல்ரீதியாக வெளிப்படுத்தக்கூடிய அடியான் ஃபல் பஸ்தஜீபூ லி –ஐ செயல்ரீதியில் வெளிப்படுத்தக்கூடிய அடியானாக மாறாதவரை நிறைவேற்ற முடியாது.

அல்லாஹ் நமது நிலைகளைச் சீர்திருத்த மேலும் ரமலானைக் கடந்து செல்லும் வாய்ப்பை வழங்கியிருக்கிறான். இது அல்லாஹ் நம்மீது செய்துள்ள மாபெரும் கருணையாகும்.

இதில் இறை நெருக்கத்தைப் பெறுவதற்கும் அல்லாஹ்வின் கட்டளைகளை அதிக அளவு செய்வதற்கும் வழிகள் திறக்கப்படுகின்றன. மேலும் ஈமானில் முன்னேறுவதற்கான வழிகள் அதிகமாக திறக்கப்படுகின்றன. எனவே நம்மில் அல்லாஹ்விடம் இருந்து வெளிப்பட்ட இந்த வார்த்தை இபாதி அதாவது என்னுடைய அடியான் என்ற பெருமையைப் றெக்கூடியவர்கள் அதிர்ஷ்டசாலி ஆவார்கள். நாம் முழு ஆர்வத்துடன் இறை நெருக்கத்தை அடைவதற்கு முயற்சி செய்யக் கூடியவர்களாவோம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த மாதத்தின் முக்கியத்துவத்தினை அறிவித்தவாறு கூறுகின்றார்கள்:**

இந்த மாதம் உள்ளத்தை ஒளியூட்டுவதற்கு மிகவும் சிறந்த மாதமாகும். அவர்கள் கூறுகின்றார்கள்: சலாம் (தொழுகை) உள்ளத்தை தூய்மையாக்குகிறது. சவ்ம் (நோன்பு) உள்ளத்தை பிரகாசமாக்குகிறது. உள்ளத்தைப் பிரகாசப்படுத்துவதற்கு இந்த மாதம் ஓர் உண்மையான மாதமாகும். இது ஏன் உன்னதமான மாதமாகும் என்று கேட்டால், இந்த மாதத்தில்தான் அல்லாஹ் இரண்டு இபாதத்துகளை ஒன்றுசேர்த்து அடியானுக்கு அதனை செய்வதற்கான வாய்ப்பினை வழங்கினான்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உள்ளத்தை தூய்மையாக்குவது என்பது நஃப்ஸே அம்மாராவின் ஆசைகளிலிருந்து தூரம் விலகியிருப்பதாகும். உள்ளத்தின் பிரகாசம் என்பது அவரிடம் கஷ்ஃப் உடைய கதவுகள் திறப்பது மற்றும் இறைவனைக் காண்பது ஆகும். இதுதான் நமது நோக்கங்களாகும். இதனை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ரமலானில் இரண்டு இபாதத்துகள் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளன. நான் கூறியது போன்று தொழுகையும், நோன்பும் ஆகும். எனவே ரமலானில் நமது தொழுகையை எந்த அளவு பற்றுடன் நிறைவேற்ற வேண்டுமெனில், இதன் மூலம் நஃப்ஸின் தீமைகள் மற்றும் மன இச்சைகளிலிருந்து விலகியிருக்கக்கூடிய ஒரு தூய்மையைப் பெற வேண்டும். இதன் மூலம் ஃபஇன்னீ கரீப் – நான் அருகில் இருக்கிறேன் என்ற சப்தத்தைக் கேட்க வேண்டும். நமது தொழுகைகளும், நமது நோன்புகளும் வெறும் ரமலான் வரை மட்டும் உணர்ச்சிகரமாக இருக்கக்கூடாது. மாறாக நாம் ஏற்படத்துகின்ற மாற்றங்களைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற நிய்யத் இருக்க வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளை எப்பொழுதும் கடைபிடிப்பவர்களாக மாற வேண்டும். தமது ஈமானை மேலும் அதிகமாக பொழிவுபெறச் செய்ய வேண்டும்.

இதில் நமது வெற்றியும் அடங்கியிருக்கிறது. உலகத்தின் வெற்றியும் இதில்தான் அடங்கியிருக்கிறது என சிந்தனை செய்தவாறு செயல்படுத்த வேண்டும். நாம் இருட்டில் இருந்தால் மற்றவர்களுக்கு எவ்வாறு வழிகாட்ட முடியும். நாம் இபாதி (அடியான்) என்ற வார்த்தையின் ஆழமான ஞானத்தைத் தெரியாமல் இருக்கும் போது மற்றவர்களை இபாதுர் ரஹ்மானாக்க எவ்வாறு வழிகாட்ட முடியும்? நான் கூறியது போன்று அல்லாஹ் இக்காலகட்டத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எதற்காக தோன்றினார்களோ அதே பணியைச் செய்வதற்காகவே அனுப்பி இருக்கின்றான்.

இறைவனை அடைவதற்கு ஏங்கிக் கொண்டிருந்த அந்த அடியார்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கேட்ட அதே கேள்வியைத்தான் உலகம் அன்னாருடைய உண்மை பேரன்பரிடம் கேட்டது. அந்த உண்மைப் பேரன்பர் சீர்திருத்தத்திற்கான வழியினைக் காட்டிக் கொடுத்தார்கள். மேலும் தன்னைச் சுற்றி ஒரு ஜமாஅத்தை உருவாக்கினார்கள். இதே கேள்வியைத் தான் உலகம் மூஃமின்களின் ஜமாஅத்திடம் கேட்கிறது. எனவே மூஃமின்களின் ஜமாஅத்திலுள்ள ஒவ்வொருவரும் லெப்பைக் என்று கூறக்கூடியவராக ஈமானில் முன்னேறக்கூடியவராக இருக்கக்கூடிய தரத்தை அடையும் போதுதான் மூஃமின்களின் ஜமாஅத் அதற்குப் பதில் அளிக்க முடியும். நமது அழைப்புக்கு இறைவன் பதில் அளிக்கும்போதுதான் இன்னீ கரீபைப் பற்றிய ஞானம் நமக்கு கிடைக்க முடியும்.

இன்று உலகில் குழப்பங்கள் தான் நிறைந்து காணப்படுகின்றன. கிழக்காக இருந்தாலும் சரி, மேற்காக இருந்தாலும் சரி, முஸ்லிம் நாடுகளாக இருந்தாலும் சரி, அலலது வளர்ச்சி பெற்ற கிறிஸ்தவ நாடாக இருந்தாலும் சரி ஒரு அமைதியின்மை உலகை ஆட்கொண்டுள்ளது.

கடந்த நாட்களில் இந்த நாட்டில் கலவரம் ஏற்பட்டது. அமைதியின்மை வெளிப்பட்டது. இவை இந்நாட்டு மக்களின் கண்களையும் திறந்து விட்டன. ஏழை நாடுகளின் அமைதி மட்டும் ஆபத்துக்குரியதாக இல்லை. மாறாக இதுபோன்ற நாடுகளின் அமைதியும் ஆபத்துக்குரியதாக இருக்கின்றது. எனவே இதற்கு ஒரேயொரு சிகிச்சை மட்டும் தான் உள்ளது. அது உலகத்தை இறை அடியானாக மாற்ற வேண்டும். இது எவ்வாறு முடியும்? நம்மிடம் எந்த சக்தியும் இல்லை. மேலும் ஏதாவதொரு உலக சக்தி மூலமாக இறைவனைக் கண்டறியச் செய்யவும் முடியாது. உலகத்தின் நிலைமையைச் சரிசெய்வதற்கு இக்காலத்தின் இமாம் நமக்கு கற்றுத் தந்த ஒரேயொரு வழி மட்டும் தான் உள்ளது. சாந்தி, சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி செய்யும் போது அங்கு இறைவனது உதவியையும் தேடுங்கள். துஆவின் பக்கம் அதிக கவனம் செலுத்துங்கள். முயற்சி செய்யும் இடங்களிலெல்லாம் முயற்சியை விட துஆவிற்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

ஆனால் இதற்கு முன்பும் நான் கூறியது போன்று, அல்லாஹ்வின் உதவி, துஆ ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகியவை அல்லாஹ்வின் மீது கொண்டுள்ள ஈமான் உறுதிப்பாடு கொண்டுள்ளவர்களுக்கும் அவனுடைய கட்டளைக்குக் கீழ்படிந்து நடப்பவர்களுக்கு மட்டும் தான் கிடைக்கும்.

துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான சில வழிகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். அவற்றை உங்கள் முன்பு சுருக்கமாக வைக்கின்றேன்.

அல்லாஹ் எப்படிப்பட்ட விஷயங்களைக் கேட்பதன் மூலம் துஆ ஏற்றுக் கொள்ளப்படும் என்று கூறுகின்றான். ஹிதாயத்தின் பக்கம் வழி நடத்தி இறைவனுக்கும் அடியானுக்கும் உள்ள தொடர்பை உறுதிப்படுத்தக்கூடிய அந்த ஈமான் எப்படிப்பட்டதாகும். ஒரு நிபந்தனையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அது தக்வாவின் அடிப்படையில் மனிதன் செல்லக்கூடியதாகும். இறையச்சம், பயம் மனிதனுக்கு முன்பு எந்நேரமும் இருக்க வேண்டும். இறைவன் என்னை எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணம் வேண்டும். எனது எந்த செயலும் இறைவனை கோபமூட்டக்கூடியதாக இருக்கக் கூடாது. உடல் உறுப்புகள் இறை கட்டளைகளுக்கு ஏற்ப செயல்படக் கூடியதாக இருக்க வேண்டும். மேலும் எல்லா ஒழுக்கங்களும், படைப்பினங்களுடன் கொண்டுள்ள தொடர்பு இறைக் கட்டளைக்கேற்ப இருக்க வேண்டும். இதுதான் அசல் தக்வா ஆகும். மனிதனது கண், காது, நாக்கு, மூக்கு, கை, கால் போன்றவை இறைவனுக்கு விருப்பமானவற்றையே செய்ய வேண்டும். இறை இருப்பின் மீது முழுமையான நம்பிக்கை இருக்கும் போதுதான் இது நடைபெறும்.

அல்லாஹ்வின் இருப்பின் மீது முழுமையான நம்பிக்கை வைக்க வேண்டும். இதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முக்கியமான ஒரு விஷயத்தைக் கூறினார்கள். அதாவது துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இறை இருப்பின் மீது முழுமையான நம்பிக்கை அவசியமாகும். அதாவது இறைவன் இருக்கின்றான். வானங்கள், பூமி அனைத்து உலகங்களையும் நமது அறிவுக்கு எட்டக்கூடிய மேலும் அறிவுக்குப் புலப்படாத ஒவ்வொரு பொருளையும் படைத்தவன் இறைவன் ஆவான். வெறும் படைக்க மட்டும் செய்யவில்லை. மாறாக அனைத்து சக்திகளுக்கும் சொந்தக்காரன் ஆவான். அவன் அனைத்து ஆற்றல்களின் சக்திகளின் ஆணி வேர் ஆவான். அவன் படைத்ததை அழிக்கக்கூடிய வல்லமையுள்ளவன் ஆவான். அவன் விரும்பியதை உண்டாக்குவதற்கும் வல்லமையுள்ளவனும் ஆவான். அவன் வாழ்வைக் கொடுப்பவனும் மரணத்தைக் கொடுப்பவனும் ஆவான். மரணித்தவர்களை உயிர்ப்பிக்கக் கூடியவனும், உயிருள்ளவர்களை மரணிக்கச் செய்பவனும் ஆவான். மேலும் துஆக்களின் மூலமாகவும் ஒரு புரட்சியை உருவாக்கி மரணித்தவர்களிடத்தில் ஒரு புதிய வாழ்வை ஏற்படுத்துகிறான். அவன் அனைத்திற்கும் வல்லமை படைத்தவன். நமது துஆக்களை ஏற்றுக் கொள்ளக்கூடியவன் ஆவான். எந்த துஆவை சிறந்தது என நினைக்கின்றானோ அதனை ஏற்றுக் கொள்வான்.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

அவன் எந்த துஆவினை சிறந்தது என கருதுவானோ அதனை ஏற்றுக் கெள்கிறான். மேலும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு உருக்கமும் அவசியமாகும். துஆ செய்யும் போது வெறும் வார்த்தைகளை மட்டும் கூறிவிட்டு துஆ செய்யக் கூடாது. மாறாக ஒரு உருக்கம் ஒரு வருத்தம் ஏற்பட வேண்டும். உள்ளம் உருக வேண்டும். கண்களிலிருந்து கண்ணீர் வர வேண்டும். இறைவன் மட்டும் தான் எனது உதவியாளன். அவன் மட்டும் தான் எனது துஆவை ஏற்றுக் கொள்ளக் கூடியவன் ஆவான் என்ற சிந்தனையில் கண்ணீர் வர வேண்டும். ஒரு அழுகை போன்ற நிலைமை ஏற்பட வேண்டும். ஒரு அமைதியின்மை ஏற்பட வேண்டும். இது கடைசி உதவிக்கரமாகும். இதுவும் முடிந்து விட்டால் இந்த உலகமும் மறுமையும் வீணாகி விடும். அன்னார் கூறுகின்றார்கள்: உங்களுடைய துஆவில் இது போன்ற நிலைமைகள் தான் ஏற்பட வேண்டும்.

துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான அடுத்த நிபந்தனை தன்னடக்கம் ஆகும்.

இந்த தன்னடக்கம் தான் இறை நெருக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகும். ஓரிடத்தில் **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உங்களின் சிந்தனையில் அனைவரையும் விட தாழ்வானவராக உங்களைக் கருதுங்கள். இவ்வாறு செய்வது உங்களை இறை சந்திப்பிற்கான இடத்திற்கு இட்டுச் செல்லும்.

தன்னடக்கத்தின் எல்லையை அடையும் போதும், தன்னைத்தானே தாழ்ந்தவான கருதும் போதும், தனது உள்ளத்தை அனைத்து விதமான தற்பெருமையிலிருந்து தூய்மைப்படுத்தும் போதும் தான் அல்லாஹ்வின் நெருக்கம் கிடைக்கப் பெறும். அவ்வாறில்லையென்றால் தற்பெருமை கொண்டவன் ஒருபோதும் இறை நெருக்கத்தைப் பெற மாட்டான். இறைவனது நெருக்கம் மற்றும் தொடர்பு இல்லையென்றால் பிறகு துஆவும் ஏற்றுக் கொள்ளப்படாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

தன்னடக்கம், அழுகை மற்றும் தாகமுள்ள உள்ளத்துடன் நிறைந்து இருக்கக் கூடிய துஆ இறைவனது அருளை இழுத்துக் கொண்டு வரும். மேலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு தனது அசல் நோக்கத்தையே அடைந்து விடும். ஆனால் ஒரு கஷ்டம் என்னவென்றால் இவ்வாறு நடப்பதும் இறைவனது அருள் இல்லாமல் நடைபெறாது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அசல் மற்றும் உண்மையான துஆவிற்கான துஆதான் தேவையாக இருக்கிறது. மனிதனுக்கு துஆ செய்வதற்கான வாய்ப்பே கிடைப்பதில்லை. அதாவது ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய துஆ செய்வதற்கான வாய்ப்பு கிடைப்பதற்கும் துஆ தான் அவசியமாகும். இந்த எண்ணம் இருந்தால் துஆவில் கவனமின்மை, அமல்களிலிருந்து விலகிச் செல்வதற்கென்ற கேள்விக்கே இடமிருக்காது. அதாவது அல்லாஹ் கூறிய அமல்களைச் செய்வதற்கும் இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான வழியாகவும் அல்லாஹ் இதனைக் கூறியுள்ளான்.

**அன்னார் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் தனது படைப்பினங்களின் பலனுக்காக திறந்த ஒரு வாசல் துஆ ஆகும். ஏதாவது ஒரு மனிதர் அழுது புலம்பியவாறு அதில் நுழையும் போது அல்லாஹ் அவருக்கு தூய்மை மற்றும் பரிசுத்தத்தின் ஆடையை அணிவிப்பான். தனது கண்ணியத்தை அவன் மீது எந்த அளவு போட்டு விடுவான் என்றால் அவர் வீணான தேவையற்ற காரியங்களிலிருந்து தவிர்ந்து வெகுதூரம் சென்று விடுவார். எனவே அழுது புலம்பியவாறு தனது உள்ளத்தை தூய்மைப்படுத்தியவாறு வீணான உலகக் காரியங்களிலிருந்து தன்னைத் தானே தடுத்தவாறு அல்லாஹ்வின் கண்ணியம் இறக்கப்பட்ட அந்த நெருக்கமானவர்களாக ஆகிவிடக் கூடியவர்கள் அதிர்ஷ்டசாலிகள் ஆவார்கள். மேலும் அவர்களை தீயவற்றிலிருந்து விலக்கி விடுகிறான்.

ஆனால் இந்தத் தரத்தைப் பெறுவதற்கும் கூட முதலில் மனிதன் தான் முயற்சி செய்ய வேண்டும். அவன் தான் முதலில் இறைவன் பக்கம் குனிய வேண்டும். இதுதான் இயற்கைச் சட்டமாகும். இதுதான் அல்லாஹ்வின் சட்டம் ஆகும். இதுதான் ஷரீஅத் சட்டமாகும். அல்லாஹ் குர்ஆனில் இதனைத்தான் கூறியுள்ளான்.

பிறகு துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்குரிய கட்டளைகளுள் அல்லாஹ்வின் ஒரு முக்கியமான கட்டளையான இதனைப் பற்றி முன்னரும் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் மற்றும் அடியானுக்கு இடையில் உள்ள உரிமை ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனைப் பற்றி கூறுகின்றார்கள்:**

உங்கள் மீது படைப்பினங்களின் உரிமை மற்றும் இறைவனின் உரிமை எஞ்சியிருக்காத அளவுக்கு நீங்கள் ஆகிவிடுவீர்கள்.

நினைவில் வையுங்கள். படைப்பினங்களின் உரிமைகளை செலுத்தாதவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்படாது. ஏனென்றால் அவன் அநீதியிழைப்பவன் ஆவான்.

பிறகு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: கஷ்டங்கள் வரும் போது பயப்படக்கூடியவரைப் போல் அமைதியின் காலத்தில் பயப்படுவர் மீது அல்லாஹ்வின் கருணை உண்டாகும். அமைதியின் நிலையில் இறைவனை மறக்காதவரை அல்லாஹ் அவரை கஷ்டத்தின் நிலையில் மறக்கமாட்டான். அமைதியின் நிலையை சுகபோகமாக கழிக்கக் கூடியவன் கஷ்டத்தின் நிலையில் துஆ செய்தால் அவருடைய துஆ ஏற்றுக் கொள்ளப்படாது. அமைதியின் நிலையிலும் நீங்கள் அல்லாஹ்வின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அவனிடம் துஆ கேட்க வேண்டும். இதுதான் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான இரகசியம் ஆகும். அல்லாஹ் எனது விஷயத்தைக் கேளுங்கள் என்று கூறினான். ஒவ்வொரு நிலையிலும் அவனிடம் துஆ கேட்க வேண்டும். ரமலான் மாதத்தில் மட்டும் கிடையாது. கஷ்டம் வரும் போது மட்டும் கிடையாது. துன்பம் வரும் நேரத்தில் மட்டும் கிடையாது. மாறாக ஒவ்வொரு அமைதியின் சாந்தியின் நிலையிலும் சாதாரண நிலையிலும் இறைவன் பக்கம் குனிவது கண்டிப்பானதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு மனிதன் தன்னிடம் தூய்மையான மாறுதலை ஏற்படுத்த வேண்டும். அவர் தீமையிலிருந்து விலகவில்லையென்றால் அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட எல்லையை மீறினார் என்றால் அவருடைய துஆவில் எந்த விளைவும் ஏற்படாது.

அல்லாஹ் கூறுகின்றான்: ஃபல் யஸ்தஜீபூலி – என்னுடைய கட்டளையை அவர்கள் ஏற்க வேண்டும். ஏனென்றால் அல்லாஹ் செய்யச் சொன்ன கட்டளை எது? எனத் தேடி ஆராய வேண்டும். அதனைச் செய்து அதன் மூலம் இறை நெருக்கத்தைப் பெற வேண்டும். மேலும் அல்லாஹ் எந்த விஷயங்களிலிருந்து தவிர்ந்திருக்க கட்டளை இட்டுள்ளானோ அதனையும் தேடியவாறு அதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். திருக்குர்ஆனில் இதுபோன்ற கட்டளைகள் நூற்றுக்கணக்கில் உள்ளன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இறைவனது மகத்துவத்தை உங்கள் உள்ளத்தில் ஏற்படுத்துங்கள். அதன் மேன்மையை உங்கள் கண்களுக்கு முன்பாக வையுங்கள்.

நினைவில் கொள்ளுங்கள். திருக்குர்ஆனில் ஏறக்குறைய 500 கட்டளைகள் உள்ளன. அதில் உங்களின் ஒவ்வொரு உறுப்புகளும் ஒவ்வொரு ஆற்றலும் ஒவ்வொரு வயதும் ஒவ்வொரு சிந்தனையின் தரம், இயல்பின் தரம், நடைமுறையின் தரம், தனிப்பட்ட மற்றும் ஒன்றுபட்ட தரத்தின் அடிப்படையில் ஒரு பிரகாசமான அழைப்பினை விடுத்துள்ளான்.

நீங்கள் இந்த அழைப்பை நன்றியோடு ஏற்றுக் கொள்ளுங்கள். எந்த அளவு உங்களுக்காக உணவு தயார் செய்யப்பட்டுள்ளதோ அனைத்தையும் உண்ணுங்கள். அனைத்திலிருந்தும் பலன் பெறுங்கள். எவர் ஒருவர் இந்த கட்டளையிலிருந்து ஒரு கட்டளையைக் கூட மறுப்பாரோ நான் உண்மையாகக் கூறுகின்றேன். அவர் மறுமையில் தண்டனைக்குரிய நபர் ஆவார். நீங்கள் இரட்சிப்பினை விரும்பினால் அனுமதிக்கப்பட்டவற்றை பயன்படுத்துங்கள். திருக்குர்ஆனின் கட்டளையை தன் மீது சுமத்திக் கொள்ளுங்கள். உங்களால் முடிந்தவரை கட்டளைகளைக் கடைபிடியுங்கள். அடிப்படை என்னவென்றால் கொடுக்கப்பட்ட கட்டளைகளைச் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனை தனது கழுத்தில் சுமக்க வேண்டும். இதனால் தீயவர்கள் அழிந்து விடுவார்கள். வழி தவறியவன் நரகத்தில் விழுவான். வறியவனாக தனது தலை குனிபவன் மரணத்திலிருந்து

காப்பாற்றப்படுவான். உலகத்தை மகிழ்விப்பதற்காக இறைவனை வணங்காதீர்கள். இவ்வாறான நினைப்பிற்கு நரகக் குழி முன்புள்ளது.

படைத்தவனை வணங்குவது கடமை என எண்ணி நீங்கள் அவனை வணங்க வேண்டும். அவனை வணங்குவதே உங்களது வாழ்வாக இருக்க வேண்டும். நீங்கள் நன்மை செய்வதற்கான காரணம் உண்மையான அன்பிற்குரியவன், உண்மையான கருணையாளனின் நேசமாக இருக்க வேண்டும். இதனை விட தாழ்வான நினைப்பானது நஷ்டத்திற்குரிய இடமாகும்.

அல்லாஹ் ரமலானில் இந்த ரூஹை புரிந்தவாறு உண்மையான கருணையாளனை மகிழ்விக்கக் கூடியவர்களாக நம்மை ஆக்குவானாக. ரமலானுடன் துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல், கட்டளைகளைப் பேணுதல், ஈமானின் உறுதிப்பாடு, ஹிதாயத்தினை பெறுவதற்கான வழி ஆகியவற்றை இணைத்ததன் மூலம் அல்லாஹ் நன்மை செய்யவும், தனது படைப்பினங்களை துன்பத்திலிருந்தும், அழிவிலிருந்தும் காப்பாற்றத் தயாராக இருப்பதையும் உணர்த்தியுள்ளான். ஆனால் அடியானும் தனக்கு உள்ள உரிமையை நிறைவேற்ற வேண்டும். என்னுடைய சிறப்பிற்குரிய அடியானுடன் தன்னை இணைத்து நீங்களும் அல்லாஹ்வினால் சிறந்த அடியானுக்கு கொடுக்கப்பட்ட விஷயத்தின்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் அல்லாஹ்வின் சிறப்பிற்குரிய அடியார்கள் இறை படைப்பினங்களுக்காக கொண்டு வந்த போதனைகளின்படியும் அமல் செய்ய முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலம் உலகில் இறை அடியார்கள் அதிகமாகத் தென்படுவார்கள். மேலும் இந்த இறை அடியார்கள் மூலம் உலகம் அன்பு, நேசம் சகோதரத்துவத்தின் உறைவிடமாக மாற வேண்டும். உலகில் சொர்க்கத்தின் காட்சிகள் தென்பட வேண்டும். இக்காலத்தில் அழைப்பாளார்களின் அழைப்பைக் கேட்பதும் ஏற்றுக் கொள்வதும் தான் நமது வாதமாகும். இறை படைப்பினங்களுடன் அனுதாபம் கொள்வது இறை ஜமாஅத்துகளின் பொறுப்பில் ஒப்படைக்கப்படுகிறது. இவை அனைத்திலும் நாம் அல்லாஹ்வுடைய சிறந்த அடியார்களாக ஆக வேண்டும். மேலும் இறைவன் துஆவை ஏற்றுக் கொள்ளக்கூடிய அந்த மக்களுடன் நாம் இணைய வேண்டும். தனது தலைமையில் புரட்சியை ஏற்படுத்தக்கூடிய மக்களில் இணைய வேண்டும். படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதன் மூலம் தீமைகள் மற்றும் அல்லாஹ்வுடைய தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்கு முயற்சி செய்யக்கூடியவர்களுடன் இணைய வேண்டும் என எதிர்பார்க்கிறது.

எனவே இந்த ரமலான் இந்த விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்தக் கூடியதாகவும் உண்மையான அடியானாவதற்குரிய தரத்தைப் பெற மேலும் தமது ஈமானில் உறுப்பாடு மற்றும் ஒளியூட்டுவதற்காக வந்துள்ளது. நாம் இதிலிருந்து முழுமையாக பலன்பெற்றோம் என்றால் நாம் அதிர்ஷ்டசாலிகள் ஆவோம். அல்லாஹ் நமக்கு இதற்கான வாய்ப்பினை வழங்குவானாக. உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கும் கஷ்டத்திலிருந்து காப்பாற்றுவதற்கும் எந்த உலகப் பொருளும் தேவை இல்லை. நான் கூறியது போன்று அவை அனைத்தும் பலன் தராது. ஒரேயொரு ஆயுதம் மட்டும் தான் தேவைப்படுகிறது. அது துஆ என்ற ஆயுதம் ஆகும். எனவே இந்த ரமலானில் தனக்காகவும் தனது சந்ததிகளின் ஈமான் மற்றும் இறை தொடர்புக்காக துஆ செய்யுங்கள். இந்த உலகம் அழிவதிலிருந்து பாதுகாக்க துஆ செய்யுங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

முஸ்லிம்கள் மிகவும் நற்பாக்கியம் பெற்றவர்கள் ஆவார்கள். ஏனென்றால் அவர்களுடைய இறைவன் துஆக்களை கேட்கக் கூடியவன் ஆவான். இதனைப் பற்றி உண்மையான ஞானம் இன்று அஹ்மதிகளுக்கு மட்டும் தான் இருக்கிறது. நமது இறைவன் துஆவை கேட்கக் கூடியவனாக இருக்கும் போது சோர்வடைவதில் எந்தவொரு காரணமும் இல்லை.

ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய அனைத்து விஷயங்களும் நிறைவேறும் என்ற நம்பிக்கையில் நாம் அனைவரும் நிலைத்திருக்கின்றோம். இன்ஷா

அல்லாஹ். நிச்சயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கொடி உலகில் பறக்கும் நாள் வரும் இன்ஷா அல்லாஹ். பிறகு நேர்வழி கிடைக்கப்பெற்ற இறைவனது அடியார்கள் தான் பெரும்பான்மையாளர்களாக இருப்பார்கள். மீண்டும் நான் உங்களுக்கு நினைவூட்டுகின்றேன். அல்லாஹ் சிறந்த மக்களாகிய தனது நேர்வழி பெற்ற மக்களுடன் தூய்மையான மக்களுடன் நம்மை இணைத்திருப்பானாக என்ற துஆவை செய்ய ஒருபோதும் மறக்காதீர்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ரமலானின் பலனிலிருந்து பயனடையும் வாய்ப்பினை வழங்குவானாக.

இன்று ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஒரு சில ஜனாஸா தொழ வைப்பேன்.

ஒரு ஜனாஸா ஓய்வு பெற்ற சுபேதார் காஜா முஹம்மது மிர்ஸா கான் சாஹிப். இவர் ரப்வாவை சேர்ந்தவர். இவர் ஆகஸ்டு 4 ம் தேதி தனது 90வது வயதில் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் இராணுவ வீரராக இருந்துள்ளார். இரண்டாம் உலகப் போரின் போதும் இராணுவத்தில் தான் இருந்துள்ளார்கள். பாகிஸ்தான் உருவாவதற்கு முன்பாக இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் காலத்தில் காதியான் வந்து தங்கியிருந்தார்கள். அங்கு அன்னாரது அருகாமையிலிருந்த பலன் பெற்று வந்தார்கள். புர்கான் பட்டாலியனிலும் தொண்டாற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. 1953-ல் சில முக்கிய பணிகள் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. தஹஜ்ஜுத் தொழக்கூடியவரும் குர்ஆன் ஓதுவதை வழக்கமாக்கிக் கொண்டவரும் தொழுகைகளை முறையாக கடைபிடிப்பவரும் ஆவார்கள். போதுமென்ற மனம் கொண்டவராவார். இறைவழியில் அழைப்பதில் நல்ல உணர்வு கொண்ட மனிதராக இருந்தார். கிலாஃபத்துடன் நல்ல ஒரு தொடர்பு கொண்டிருந்தார். பிறகு காலத்தின் கலீஃபாவின் அனைத்து நிகழ்ச்சியினையும் மிக உன்னிப்புடன் பார்த்து கேட்டு வருவார். மேலும் அதனை நினைவில் வைத்திட முயற்சியும் செய்து வருவார். இவர் வஸிய்யத் செய்தவராகவும் இருந்தார். இவருக்கு 3 மகள்களும் 2 மகன்களும் உள்ளனர். ஒரு மகன் ராஜா முனீர் அஹ்மது சாஹிப். ரப்வாவில் ஜாமிஆவின் ஜுனியர் பிரிவின் பிரின்ஸிபல் ஆவார். இரண்டாவது ராஜா முஹம்மது யூசுப் சாஹிப். இவர் ஜெர்மனியில் வெளித்துறை செயலர் ஆவார். அல்லாஹ் மர்ஹூமுடைய தர்ஜாவை உயர்த்துவானாக.

இரண்டாவது ஜனாஸா ஷேக் நஸீர் அஹ்மத் சாஹிபின் மனைவி அமீனா பேகம் சாஹிபா உடையதாகும். இவர் ஆகஸ்டு 7 ம் தேதி மரணமடைந்துள்ளார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் காதியானிலிருந்து ரப்வா விற்கு ஹிஜ்ரத் செய்து வந்த ஆரம்பகால மக்களைச் சேர்ந்தவர் ஆவார். நல்ல மென்மையான உள்ளம் கொண்ட பெண்மணி ஆவார்கள். கிலாஃபத்துடன் நன்றியுணர்வுடனும் அன்புடனும் தொடர்பு கொண்டிருந்தார்கள். 50 வருடத்திற்கும் அதிகமாக தனது முஹல்லாவில் லஜ்னாவின் வெவ்வேறு பிரிவில் பணியாற்றக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. மேலும் உயர்ந்த நல்லொழுக்கத்தை பேணக்கூடியவராகவும் திகழ்ந்தார்கள்.

தனது பிள்ளைகளுடைய தஃலீம் மற்றும் தர்பிய்யத் தவிர முஹல்லாவின் பிள்ளைகளுக்கு குர்ஆன் ஓதிக் கொடுத்து வந்தார்கள். இவரது மகன் ஷேக் முபாரக் அஹ்மத் சாஹிப் நாஸிர் பைத்துல் மால் ஆமத் ரப்வா ஆவார்கள். இரண்டாவது மகன் ஜெர்மனியில் அன்ஸாருல்லாஹ்வில் தஃவத்தே இலல்லாஹ்வின் காயித் ஆவார்கள். ஒரேயொரு மருமகன் தான். அவர் ஜமாஅத் முரப்பி ஆவார். இவர்கள் அண்டை வீட்டாருடன் நல்ல தொடர்பு கொண்டிருந்தார்கள். வஸிய்யத் அமைப்பில் இணைந்திருந்தார்கள். அல்லாஹ் இவருடைய தர்ஜாவையும் மேன்மைப்படுத்துவானாக.

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 12.08.2011**

Translated by : **Maulavi ZIYAUL HAQ**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**